529

பதிவு எண் — M. 5720   வெள்ளிக் கிழமையில்   குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளயீடு :- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-4   குருகுலம், மாம்பாக்கம்; கர, புரட்டாசி; 12—10—51.   தளிர்-52

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

உலகுக்கு ஒரு முதல்

உலகம், ஒரு பயிற்சிக் கூடம். ஓரறிவு உயிர்கள் முதல் ஆறறிவு உயிர்கள் வரையில் எல்லா வகையான உயிர்களும் அதில் நடமாடி அறிவு விளக்கம் பெற்று வருகின்றன.

விளங்கிய அறிவுக்கு ஆராய்ச்சி பிறக்கின்றது; கண்ணுக்குத் தெரியும் உலகத்தை 'அது என்ன?' என்றும் 'அது எப்படி இயங்கு கின்றன?' என்றும், 'அதில் வளர்ந்து பயிற்சி பெற்று வரும் உயிர்கள் என்ன நிலையுள்ளன?' என்றும் அது பல முகமாக எண்ணிப் பார்க்கின்றது. இந்த எண்ணம் உயர்ந்த உயிர்களாகிய மக்களுக்குச் சிறப்பாக நிகழ்கின்றது.

மக்கள், மொழிப் பயிற்சி உள்ளவர்கள்; தாம் பேசும் மொழியொலிகளில் 'அ' என்னும் முதல் ஒலி அவர்கள் உள்ளத்தைக் கவர்கின்றது. உயிரெழுத்துகள் மெய்யெழுத்துகள் எல்லாம் அந்த அகர ஒலியை முதலாகக் கொண்டு நடைபெறுதல் அவர்கள் நினைவுக்கு வருகின்றது.

மொழியில் அப்படி ஒரு நிலை இருப்பதுபோல, உலகத்திலும் உயிரினங்கள் பொருளினங்கள் எல்லாம் ஒரு முதற் பொருளைத் தலைமையாகக் கொண்டு அதன் உதவியால் நடைபெறும் நிலையும் இருக்கலாம் என்று அவர்கள் உள்ளம் எண்ணத் தொடங்கி விடுகின்றது.

நன்றாய் எண்ணிப் பார்த்த திருவள்ளுவரைப் போன்ற பெரியோர்கள், 'உலகம் கடவுள் என்னும் ஒரு முதலை உடையதுதான்' என்று தீர்மானமாகத் துணிந்து, மற்றவர்களுக்கும் தெரிவித்திருக்கிறார்கள். அது முதல், நல்லவர்களெல்லாரும், இந்த உண்மையை எங்கும் பரவச் செய்து வருகிறார்கள்.

தலைவனைத் தெரிந்து அவன் உதவியைப் பெறாதவர்கள், தக்கபடி வாழ்க்கை நடத்த முடியாதென்பது வெளிப்படை. ஆகலால், 'உலகுக்கு ஒரு முதல்' என்னும் இறைவனை முதலில் தெரிந்து கொள்வது, வாழ்க்கைச் சிறப்புக்கு நல்லது.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

எழுத்தெல்லாம் அகரம் முதல—உலகத்திலுள்ள மொழிகளின் எழுத்துக்களெல்லாம், அகர எழுத்து என்னும் முதலை உடையன; உலகு ஆதிபகவன் முதற்று—அதுபோல, உலகம் கடவுள் என்னும் ஒரு முதலை உடையது.

'அகரம்' என்றது 'அ' என்னும் ஒலியை; இதன் வரிவடிவம் ஒவ்வொரு மொழியில் ஒவ்வொரு வகையாக இருக்கும். இதன் ஒலி வடிவு எல்லா மொழிகளுக்கும் பொது.

எழுத்துக்களில் 'அ' என்பது ஆதி எழுத்து; வாயைத் திறந்த வுடன், வேறு முயற்சியின்றி எழுகின்ற முதல் எழுத்து; இதன் கூட்டுறவோடும் துணையோடும் மற்ற எல்லா எழுத்துக்களும் இயங்கும்.

கடவுள் நிலையும் இந்த அகரத்தின் நிலையைப் போன்றது! உலகங்களெல்லாம் 'கடவுள்' என்னும் முதலின் கூட்டுறவோடும் துணையோடும் இயங்கி வருகின்றன. ஆதலால், 'உலகுக்கு ஒரு முதல்வன் உண்டு' என்னும் கடவுள் உண்மை, இதனால் வெளிப்படுகின்றது.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

4-ம் ஆண்டுக் கையொப்பம்
(5-10-51 முதல்)

உள் நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0

விற்பனை யாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக

முகவரி :—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.

இலை	கர, புரட்டாசி,	தளிர்
4	12-10-51 வெள்ளி	2

வள்ளலாரும் - - - - காந்தியடிகளும்

இவ்வாண்டு அக்டோபர் மாதம் 2ஆம் நாள், மேலே குறிப்பிட்டுள்ள இரண்டு பெரியார்களின் பிறந்த நாளாக அமைந்தது. கடந்த வார முழுவதும் பல இடங்களில் இந் நன்னாளை ஒட்டி வழிபாடுகளும், சொற்பொழிவுகளும், இன்னிசைப் பாராயணங்களும் நடைபெற்றன.

வடலூரடிகளும் காந்தியடிகளும் அண்மைக் காலத்தில் நம் நாட்டில் தோன்றி முறையே சமயத்துறையிலும் அரசியல் துறையிலும் சிறந்து நின்று பெருந் தொண்டுகளையும் சீர்திருத்தங்களையும் செய்தவர்களாவர். இருவரும் எளிய வாழ்வை மேற்கொண்டு எல்லாவுயிர்க்கும் இன்னா செய்யாமை என்னும் அகிம்சை நெறியில் மக்களை நிறுத்த அரும்பாடு பட்டவர்கள். தமக்கென வாழாமல் உலகுக்கெனவே வாழ்ந்தவர்கள்.

வரையறைப்பட்ட சாதி சமய முதலிய சிறு கொள்கைகளுக்கு அடிமைப்பட்டிருந்த மக்களுக்கு விழிப்பூட்டியவர் வடலூரடிகள்; முறையற்ற வேற்றவர் அரசுக்கு அடிமைப்பட்டிருந்த மக்களுக்கு விடுதலை யுணர்ச்சி யூட்டியவர் காந்தியடிகள்.

இருவருமே வழிபாட்டிலும் தொண்டிலும் மிக்க ஈடுபாடுடையவர்களாக இருந்தார்களெனினும் சிறப்பு முறையில் வடலூர் அடிகள் வழிபாட்டு நெறியிலும் காந்தியடிகள் தொண்டு நெறியிலும் பெரிதும் சிறந்து, முறையே சோதி நாட்டத்தையும், நீதி நாட்டத்தையும் மக்கள் கொள்ளுமாறு செய்திருக்கின்றார்கள். மக்களின் மூட நம்பிக்கைகளை மாற்றி அருளியலிலும் உலகியலிலும் சிறந்து நிற்குமாறு முயன்றிருக்கின்றார்கள். முன்னவர் சமய வெறியையும் பின்னவர் அரசியல் கட்சி வெறியையும் ஒழிக்க முயன்றவராவர்.

காந்தியடிகள் காலத்தால் பிற்பட்டவராதலின் பல வசதிகளும் வாய்ப்பும் பெற்று உலகப்புகழ் பெற்றார். வள்ளலார் காலத்தினால் சிறிது முற்பட்டு, தக்க வாய்ப்பு நேராமையினால் தமிழ் நாட்டளவிலேயே புகழ் பெற்றார். ஆனால் இருவருடைய அறவுரைகளும் (உபதேசங்களும்) உலகப் பொதுமை பெறக் கூடியவையே. வள்ளலார் தமது சிறு பொழுதிலேயே திருவருள் பெற்றுத் திகழ்ந்தார். காந்தியடிகள் தாம் திருவருளைப் பெறவில்லை என்றும், ஆனால் அதனிடத்தில் முழு நம்பிக்கை வைத்து மனச்சான்றின்படி தொண்டு செய்பவன் என்றும் தம்மைப்பற்றிக் கூறிக் கொண்டிருந்தார். எனவே முன்னவர் தெய்வ நிலையிலும், பின்னவர் மனித நிலையிலும் சிறந்து வாழ்ந்தவர்கள் என்று அறிதல் வேண்டும்.

இருவருக்குமே நாட்டில் சிற்சில எதிர்ப்புகளும் இன்னல்களும் நேர்ந்தன என்றாலும் இறுதியில் எல்லோரும் போற்றுகிற முறையிலேயே அவர்கள் திகழ்ந்திருக்கிறார்கள்.

வள்ளலார் நினைத்ததைச் செய்யும் சித்துக்களில் வல்லவராயிருந்தார். காந்தியடிகள் தமக்குச் சித்து ஒன்றும் தெரியாது என்றும், ஆனால் அன்பு நெறியில் நின்று எத்தகையவரையும் நேர் வழியில் நிறுத்தத் தம்மால் முடியும் என்றும் கூறி அவ்வழியில் உறுதி பூண்டவர்.

காந்தியடிகள் அவ்வப்போது தமது மனத்தோடு போராடித் தமது ஒழுக்க நிலையை உயர்த்திக் கொண்டு விழுப்பமுற்றார் என்று அவர்கள் எழுதியுள்ள **(My Experiments with truth)** 'சத்திய சோதனை', என்னும் நூலால் தெரிகின்றது. வள்ளலார் தமது வினையோடு போராடித் தமது பிறவியையே உயர்த்திக் கொண்டார் என்பது அவர்கள் பிள்ளைப்பருவ வரலாறு, திருமணம், பிற்கால வாழ்க்கை முதலியவற்றால் தெரிகின்றது.

நமது காலத்திலும் நம் தாதையர் காலத்திலும் இந் நாட்டின் இரு பெருஞ் சோதிகளாய்த் தோன்றி உலகியலிலும் அருளியலிலும் சன்மார்க்க நெறியைக் காட்டிச் சென்ற இச் சான்றோர்களின் அறவுரைகளைப் பின்பற்றி அன்பும் அருளும் பேணி மன்பதை உய்வதாக!

—ஆடலரசு.

அறிவும் உணர்வும் என்ன?

டாக்டர் மு. வ. சொற்கள்.

அறிவும் உணர்வும் இயற்கையாக அமைந்த பண்புகள். அறிவே இல்லாதவனையும் உணர்வு அற்றவனையும் உலகத்தில் காணமுடியாது. ஆனால் போதிய அறிவு வளர்ச்சி இல்லாதவர்களையும் காணலாம், அறிவு மிகுதியாகப் பெற்றவர்களையும் காணலாம். போதிய உணர்வு அற்றவர்களையும் காணலாம், உணர்வு மிகுந்தவர்களையும் காணலாம்.

அறிவும் உணர்வும் வேறுபட்ட இரு பண்புகள். ஆயினும் பிரிக்க முடியாதனவாய் உள்ளன......அறிவையும் உணர்வையும் தனித்தனியே பிரிக்க முடியாவிட்டாலும், அறிவு மிக்கவரையும் உணர்வு மிக்கவரையும் தனித்தனியே பிரிக்க முடியும்.

அறிவு மிக்கவர் எதைக் கண்டாலும் முதலில் எண்ணத் தொடங்குவர், பிறகே உணரத் தொடங்குவர். உணர்வு மிக்கவர் எதைக் கண்டாலும் முதலில் உணரத் தொடங்குவர்; பிறகுதான் எண்ணத் தொடங்குவர். ஆண்களில் பெரும்பாலோர் முதலில் எண்ணத் தொடங்குவர். பெண்களில் பெரும்பாலோர் முதலில் உணரத் தொடங்குவர். ஒரு குடும்பத்தின் தந்தையையும் தாயையும் ஆராய்ந்தே இவ்வுண்மையைக் காணலாம். அதனாலேயே ஆண் மூளை சிறந்தவன் என்றும், பெண் இதயம் சிறந்தவள் என்றும் டென்னிசன் என்னும் ஆங்கிலப் புலவர் தெரிவித்துள்ளார். அறிவு மிக்கவர் எதிர்காலத்தைப்பற்றி, எண்ணித் தற்காப்புத் தேடிக்கொள்வதில் வல்லவர். உணர்வு மிக்கவரோ நிகழ் காலத்திலேயே மூழ்கித் தம்மை மறந்து தொண்டு செய்ய முந்துபவர். அறிவு மிக்கவர் உள்ளத்தில் உள்ளதற்கு மாறுகப் பேசவும் நடிக்கவும் வல்லவர். உணர்வு மிக்கவரோ உள்ளொன்று புறமொன்றாக நடிக்க அறியாதவர். உள்ளத்தில் உள்ளதை எல்லாம் கண்ணும் முகமும் காட்டப் பளிங்குபோல் விளங்குபவர்......பெரும்பாலும் ஆண், இளமை நிரம்பிய போது அறிவு சிறந்து உணர்வும் வளர்ந்து விளங்குகின்றான். பெண் இளமை நிரம்பியபோது உணர்வு சிறந்து அறிவும் வளர்ந்து விளங்குகிறாள். இதற்குரிய வித்துக்கள் விளையாட்டுப் பருவத்திலேயே காணப்படுகின்றன. அமைதியாக இருந்து பெண் சிற்றில் இழைக்கும் பருவத்தில் ஆரவாரமாக இலங்கி ஆண் சிற்றில் சிதைக்கும் நிலையில் இருக்கின்றான். இவ்வாறே சிறுமியின் மனம் பெரிதும் ஆக்க வேலையில் முனைந்திருக்க, சிறுவன் மனமோ அழிவு வேலையில் ஊக்கங் காட்டுகின்றது. அதனால் பெண் அமைதி மிக்கவளாக வளர்கிறாள். ஆண் ஆற்றல் மிக்கவனாக வளர்கின்றான். இது இயற்கையின் வியக்கத்தக்க முறையாக அமைந்திருக்கின்றது.

ஆனால், அமைதி மட்டும் பெற்றிருப்பதோ ஆற்றல் மட்டும் பெற்றிருப்பதோ வாழ்க்கைக்குப் போதா. அமைதிக்கு ஆற்றல் வேண்டும்; ஆற்றலுக்கு அமைதி வேண்டும். இயற்கையே இதற்கும் வழி வகுத்திருக்கின்றது. ஆணின் இளமை பெண்ணைக் கவரவும், பெண்ணின் இளமை ஆணைக்கவரவும் கவர்ச்சி அமைத்துள்ளது. உடலில் உள்ள இளமை அழகு மட்டுமல்லாமல் உள்ளத்தில் உள்ள இளமைப் பண்பும் ஒருவரை ஒருவர் கவருமாறு அமைத்துள்ளது. இத்தகைய தூய கவர்ச்சியே காதல் எனப்படுவது.

(—திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்.

(ஆடலரசு)

PHONE 55034 TELENKAYAM
கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்
கருப்பண முதலியார் அண்ட் ஸன்ஸ்
53, கிடங்குத்தெரு சென்னை 1.

சிந்திய கருத்துக்கள்

பெரிய புராணச் சொற்பொழிவில்

(மயிலை ந. இராமலிங்கம்)

1. உயிர்களை ஆட்கொண்டு படிப்படியாய் உயர்த்துதலே இறைவனுக்குச் செய்கை; இறைவன் தவம்!

2. இறைவன், நல்லவரிடத்தில் ஊன்றி யிருப்பான்; மிக விளக்கமாகவும் இருப்பான். ஆனல், அல்லாதவரிடத்திலேயே அவனுக்குப் பணி மிகுதி!

3. பிறர் தீங்கு செய்தாலும் அவற்றைப் பொருட் படுத்தாமல் அவர்க்கு நன்மை செய்து அவர் மனம் நல் வகையில் மாறுதலையே எதிர்நோக்குவர் உயர்ந்தோர். அது, தெய்வகுணம்.

4. மன மாசு நீங்கி ஆருயிர்ப் பணி புரிதல் இறை பணியில் அமையும்.

5. வேள்வி என்பது இல்லறச் சடங்கு; கொடைக்கு உரிய சடங்கு.

6. அன்பும் அறனும் இல்லறம்; அன்பென்னுந் தாயினிடம் அறன் என்னுந் தந்தைக்குத் தோன்றுங் குழந்தை அருள்; அது துறவறம். "அருள் என்னும் அன்பு ஈன் குழவி" என்றார் திருவள்ளுவர்.

7. நினைவு பிசகுதல், சூழலில் மயங்குதல், நிலையற்ற வாழ்வு போன்ற காரணங்களால் மக்கள் தம் வாக்குக்கு வேருக எதனையும் எழுதிக் கொடுப்பது இயல்பு. மற்றப்படி வாக்குத் தவறி ஏமாற்றுவர் என்பதற்காக அன்று. மன்பதை ஏமாற்றும் என்று எண்ணினல், அந்த இழிவு, மன்பதையைச் சேர்ந்த தமக்கும் நேரும்.

8. வெடிச் சிரிப்பு, பாசத்தின் விளையாடல்! அக மகிழ்ச்சி பெருந் தன்மையின் நிகழ்ச்சி! அக மகிழ்ச்சி அடைய முடியாத மக்களுக்குப் புறச்சிரிப்பேனும் இருக்கவேண்டும் என்பதற்காக, மருத்துவர், 'சிரிப்பு வேண்டும்' என்றனர்.

9. முன்னோரால் குற்றம் இல்லாதது, மாசில்லாத மரபு! சொத்துக்கு உரிமை கொண்டாடும் மக்கள், முன்னோர் குற்றங்களுக்கும் பொறுப்புணர்ந்து கழுவாய் தேடவேண்டும்; தம் காலத்தில் தாம் குற்றம் செய்யாமலிருப்பது, பின்வரும் பரம்பரைக்கும் நன்மை தரும்.

10. மனத்தில் மாசு போக்கி அங்கே அருளாகிய திருவிளக்கேற்றி இறைவனை உணர்ந்து நிற்போர்க்கே, உயிர்களிடம் அன்பாயிருக்கும் ஆற்றல் கைகூடும்.

பெரிய புராணம்

உடனே அந்தணர்கள், முனிவரைப் பார்த்து, 'நீங்கள் முன்பு காட்டிய ஆவணத்தில் உங்கள் ஊர் நாங்கள் இருக்கும் இத் திருவெண்ணெய் நல்லூரே என்று கூறப்பட்டிருக்கிறது; அப்படியானல் இப் பெருமை வாய்ந்த ஊரில் உங்களுக்குரிய பரம்பரையான வீடும் நீங்கள் வாழும் பெரு வாழ்வும் காட்டுங்கள்' என்று கேட்க, வழக்கில் வென்ற அந்தப் புண்ணிய முனிவர், 'ஒருவரும் என்னை அறியீரானல் என் பின்னே வாருங்கள்' என்று சொல்லி, மறையவர் கூட்டமும் நம்பியாரூரும் தம் பின்னே வர அழைத்துச் சென்றார். சென்றவர், அந்த ஊரில் வேறு எங்குஞ் செல்லாமல், 'திருவருள் துறை' என்னும் பெயருடைய அவ் வூர்த் திருக்கோயிலினுள்ளேயே புகுந்து மறைந்தார்; அனைவரும் அவரைக் காணமல் திகைத்து நின்றனர்.

நம்பியாரூரர், ஆண்டவன் திருக்கோயிலில் இம் முனிவர் புகுந்ததற்குக் காரணம் எதாயிருக்கலாம் என்னும் பெரு விருப்பத்துடன் தாம் மட்டும் தனியாகச் சற்று முன்சென்று ஆர்வத்துடன் அவரை அழைத்தார். அப்போது, முனிவர் திருக்கோலத்தில் வந்த இறைவன், உமையம்மையுடன் வான்வெளியில் விடைமேல் தோன்றி, 'முன்பு நீ நமக்குத் தொண்டனயிருந்தாய்; உலகியல் வேட்கை உனக்கு மிகுந்ததனல் நமது ஏவலால் இம் மண்ணுலகில் நீ பிறந்தனை; ஆனல், பணிக்கு இயையாத துன்புறு வாழ்க்கை நின்னைத் தொடரத் தொடங்கியதால், இம் மெய்ஞ்ஞான மறையோர் முன் நின்னை யாம் தொடர்ந்து வந்து தடுத்தாண்டோம்' என்று திருவாய் மலர்ந்தார்.

இங்ஙனம் எழுந்த ஓசையைக் கேட்டு ஈன்றெடுத்த தாய்ப் பசுவின் கனைப்பொலியைக் கேட்ட கன்றுபோல் 'அர' 'அர' என்று கதறி நம்பியாரூரர், தம் உடம்பெலாம் மயிர்க்கூர்ச் செறிய, கைகள் தலைமேல் உயர்ந்து தொழ, 'இவ்வாறு வந்து புல்லியேனை வலிய ஆட்கொண்டது ஞானமன்றில் திருநடம் புரியும் தேவரீர் செயல்தானே' என்று ஆராமையாய் அரற்றினர்.

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE
MERCHANTS

AVANASHI ROAD,
COIMBATORE.

மதிப்புரை

'சங்க இலக்கிய மாண்பு'
என்னும் நூலுக்கு

மாம்பாக்கம் குருகுல அமைப்பாளர், சங்கநூற் பெரும் புலவர், சிவநெறிச் செஞ்சொற் கொண்டல், சித்தாந்தச் செஞ்ஞாயிறு

ஆசிரியர் இளவழகனார்
அவர்கள்

அளித்தது.

சங்க இலக்கியங்களின் ஆசிரியர்கள், 'சான்றோர்' என்று சிறப்புப் பெயர் பெற்றவர்கள்! நாட்டின் நன்மதிப்புக் குரியவர்களாய் விளங்கினவர்கள்!

சங்கச் சான்றோர், நாட்டுத் தலைவர்கள், அரசனுக்கும் குடி மக்களுக்கும் இடைநின்று, இரு சாரார்க்கும் வழிகாட்டி, நீண்ட காலமாகப் பெருந்தொண்டு புரிந்து நாட்டை மிக அழகாகப் பண்படுத்தினவர்கள்!

அவர்கள், அவா அற்ற தாயோராய், பொய்யடிமை யில்லாப் புலவர்களாய், பெருந்தன்மை வாய்ந்த சீலர்களாய், எறும்போற் பீடு நடை நடந்து, பல்லாயிரம் பெருமக்களாய் நாடெங்கும் பரந்து உலவி, நாட்டுப்பணி ஆற்றியவர்கள்! ஏழைகள் குடிலும் அரசர்கள் அரண்மனையும் அவர்களுக்கு ஒன்றே!

அப் பெரியோர், பொறுப்பும் உறுதியும் அருளும் கருத்தழகும் கடமைப்பாடும் உடையவர்களாதலின், அவர்கள் இலக்கியங்கள் நாட்டின் செழுங் களஞ்சியங்கள்! வாழ வழி காட்டும் பேர் ஒளி விளக்கங்கள்! தமிழர்க்கு அவையே உயிர், உடைமை, அருள் அனைத்தும்.

புலவர் முருகவேள், சங்க இலக்கியங்களின் மாண்புகளை நன்குணர்ந்து, தமது தெளிவையும் உணர்ச்சியையும் இக் கவிதை நூலாக வெளிப்படுத்தியிருத்தல் தமிழ்க்கு ஆக்கமானது! அவர் அறிவும் ஆராய்ச்சியும் கடைப்பிடியும் நெறி கொண்டு செல்லும் முறை, தக்க துறையிற் சேர்ப்பிக்கும் என்று தோற்றுகின்றது.

சங்கச் சான்றோரே என்னும்படி இஞ்ஞான்று, நல்லிசைப் பெரும் புலமை வாய்ந்து திகழ்ந்து அருந் தொண்டுகள் ஆற்றி அண்மையில் மறைந்த ஆசிரியர் மறைமலையடிகளின் முதலாண்டு நினைவு நாள் மலராக இந்நூல் வெளிவருதல், பின்னும் மகிழ்வு தருவதொன்று!

புலமைப் புகுமுக வகுப்பு, பள்ளியிறுதி வகுப்பு முதலியவற்றிற் பயிலும் மாணவர்க்கு இது பெரிதும் உதவியாயிருக்கும்; சிறந்த உணர்ச்சியை ஊட்டும்.

ஆசிரியர்க்கு மேலுமேலும் ஊக்கம் உண்டாக்குதல் தமிழகத்தின் கடமை!

எது புலமை?

மறைமலையடிகளிடம் சென்று அவர்தம்மைக் கண்டு வணங்கும் பேறுபெற்ற அவ்வொரு சில பயன்மிக்க நாட்களுள் ஒரு நாள் 'தமிழ்ப் புலவர்கள்பால் இயல்பாகக் காணப்படும் இரு பொருண் மொழிகளும் நகைச்சுவை யுரைகளும் பிறவும் தங்கள்பால் காணப்படாமைக்குக் காரணம் என்னை? என மெல்ல வினவ நேர்ந்தது. அதன் வாயிலாகப் பேச்செழுந்தபோது, "புலமை என்பது அறிவின் முதிர்ச்சி. அறிவோ சொல்லும் பொருளும் என்னும் இரண்டனுல் வளர்வது. வெறும் சொல்லறிவைக் காட்டிலும் பொருளறிவே மிகவும் விழுமியது. பொருளறிவு பெறுதல் மிகவும் அருமையாதலின், அது நன்கினிது வாய்க்கப் பெறுகார் வெறும் சொற்களை மட்டுமே அடுக்கிக் 'கடபடம்' என்றுருட்டிச் சல சலப்பர். சொல்லறிவு சில பல நூல்களை நெட்டுருச் செய்வதால் உண்டாகிவிடும். ஆனால் "கேட்பவன் கேடில் பெரும்புலவன் பாட்டவன் சிந்தித்தல் தன்னினும்" என்றபடி, பொருளறிவாகிய சிறந்த நல்லிசைப் புலமையானது சிந்தனையையே அடிப்படையாகக் கொண்டது. ஒரு சிலர் ஒழியப் பெரும்பான்மையான இடைக்காலப் புலவர்கள் சங்ககாலப் புலவர்களைப் போல ஒவ்வொன்றினையும் கூர்ந்து நோக்கி ஆழ்ந்தாராய்ந்தறியும் இயல்பினரல்லர். பல்வேறு காரணங்களால் அவர்தம் புலமை வெறுஞ் சொல்லளவிலேயே நின்று கழிவதாயிற்று. அதனாலேயே நடுக்கடலிற் காணப் பெறாத துளக்கமும் அலையெழுச்சியும் அதன் கரையோரத்தே மட்டும் காணப்படுதல் போல, அறிவெனும் பெருங் கடலிற் பெரிதும் ஆழ்ந்து சென்று மூழ்கித் திளைத்தின்புற்ற சங்ககாலச் சான்றோர்களின் செய்யுட்களிற் காணப்படாத சிலேடை யமகம் திரிபு மடக்கு முதலிய சொல்லணிகள், அக்கடலிடை ஆழச் செல்லாது மேலாகவே மிதந்து சொல்லறிவு மட்டுமே வாய்ந்த இடைக்கால பிற்காலப் புலவர்களின் செய்யுட்களிற் பெருவரவினவாய்க் காணப்படுகின்றன. யாம் எமது இளமை முதலாகவே சங்கநூற் பயிற்சியில் தலைப்பட்டு அவற்றின் சொற்பொருட் சுவைகளில் திளைத்திருந்தமையின், அவ்வியல்பே எமக்கு இயற்கையாக நம்மை யறியாமலே அமைந்து விடுவதாயிற்று" என்றிங்ஙனம் சில வுரை பகர்ந்தனர்.

அதனால் சங்க நூல்களின் சிறப்பினைக் குறித்துக் கருதுதற்குரிய வாய்ப்பு எளியேற்கு நேர்ந்தது.

—புலவர் முருகவேள் B.O.L.

மறையொலித்த - - - - - - மதுரைமாநகர்

"சிவலிங்கம்"

மதுரை என்பது எவ்வளவு மதுரமான பெயராயிருக்கின்றது! அழகோடு கூடப் பல சிறப்புகளுக்கும் இடனாயிருந்தமையின் "மதுரைமாநகர்" என யாவராலும் போற்றப்பட்டுள்ளது இந்நகர். அச்சிறப்புக்களுள் ஒன்று, நமதருமைத் தமிழ்மொழியை ஆய்ந்து வளம் படுத்திய பெரும் புலவர்கள் வீற்றிருந்த "தமிழ்ச் சங்கம்" இருந்த இடமென்பது; மற்றொன்று, தமிழை வளர்த்து மிகப் பழைய காலத்திருந்தே தமிழ்நாட்டை யாண்டுவந்து பல சிறப்புகளும் பெற்றுத் திகழ்ந்த பாண்டிய மன்னரின் தலை நகராய் இருந்ததென்பது; பிறிதொன்று, ஆதியங் கடவுளாகிய "சோம சுந்தரேசர்" திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் பெருமை வாய்ந்த தலமென்பது.

இவற்றோடொப்ப, சில சிறப்புக்கள் சங்கப் புலவர்களு ளொருவ ரியற்றிய ஒரு பாடலால் விளங்குவன. அவை வருமாறு :—

"திருமாலின் கொப்பூழினின்று அலர்ந்த செந்தாமரை மலரைப் போன்று விரிந்த அமைப்பினை யுடையது சிறந்த ஊராகிய மதுரை; அப்பூவின் அகவிதழ்களைப் போன்று ஒன்றையொன்று அடுத்தும், ஒழுங்காகவும் தெருக்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன; அவ்விதழ்களின் நடுவே தாமரையின் இளங்காயைப் போன்று ஈசனின் திருக்கோயில் விளங்குகின்றது. இளங்காயைச் சுற்றியும் இதழ்களிலும் பூந்தாது படிந்திருப்பதைப் போன்று குளுமையான தமிழ்மொழியைப் பேசும் குடிமக்கள் சூழ்ந்திருக்கின்றனர். பூந்தாதை யுண்பதற்காகப் பறவைகள் வெளியிலிருந்து வந்து போவதைப் போலப் பரிசிலைப் பெற்று வாழும் மக்கள் வெளியூர்களிலிருந்து அடிக்கடி வந்து தமிழ்க்குடிமக்களிடமிருந்து தத்தமக்கேற்ற செல்வங்களைப்பெற்று மகிழ்ச்சியோடு போகின்றனர். தாமரைப் பூவினின்று தோன்றிய நான்முகக் கடவுளின் நாவிற் றோன்றிய நான்கு வேதங்களாகிய மந்திரங்களை விடியற்காலையில் அந்தணர்கள் பயிலக் கூறும் குரலொலியைக் கேட்டு அவ்வூர் மக்கள் களிப்பினால் இனிய துயிலினின்றும் எழுவார்கள். வஞ்சி, உறையூர் முதலிய நகரங்களிலுள்ள மக்கள் கோழியின் குரலைக் கேட்டுத் துயிலெழுவார்களே யல்லாமல் மதுரையம்பதியைப் போன்று மறையொலியைக் கேட்டுத் துயில் எழுவதில்லை. அதனாலே பிற நகரங்களை விட மதுரைநகர் சிறந்தது: அது பேரூர் என்றழைக்கப் படும் சிறப்புடைத்து."

பாட்டு வருமாறு :—

மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையும் சீரூர்; பூவின்
இதழகத் தனைய தெருவம், இதழகத்து
அரும்பொகுட் டனைத்தே அண்ணல் கோயில்;
தாதின் அனையர் தண்டமிழ்க் குடிகள்
தாதுண், பறவை யனையர் பரிசில் வாழ்நர்
பூவினுட் பிறந்தோன் நாவினுட் பிறந்த
நான்மறைக் கேள்வி நவில்குரல் எடுப்ப
மெ இன்றுயில் எழுத லல்லதை
வாழிய வஞ்சியும் கோழியும் போலக்
கோழியின் எழாதெம் பேரூர் துயிலே.

—பரிபாடல் திரட்டு.

(ஆசிரியர் இளவழகனார் அவர்கள் தொகுத் தெழுதிய 'சங்க இலக்கிய இன்கவித் திரட்டு' மூன்றாம் பாகத்திலிருந் தெடுக்கப்பட்டது).

இப்பாட்டால் நாமறிவது யாதெனில் மதுரையம்பதி ஒரு காலத்தில் "மறையொலித்த மாநகராயிருந்த" தென்பது. காலம் மாறி விட்டதால், தற்போது மறையொலி கோயில்களிலொலிக்குமே யல்லது, மக்கள் செவியில் அவர்கள் துயிலெழும்போது ஒலித்தலில்லை. மீண்டும் மறையொலி எழுந்து மக்களை எழுப்ப வேண்டும், அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நாம் எண்ணங்கொண்டால் நாம் ஒரு முறை வகுத்துக்கொண்டு அவ்வாறு செய்யலாம். அஃதாவது தமிழ் மறைகளாகிய தேவாரம், திருவாசகம் முதலிய அருந்தமிழ்ப் பாடல்களை இசை பயின்ற அன்பர்கள் இன்னிசைக் கருவிகளுடன் தினந்தோறும் விடியற்காலை (5 மணியிலிருந்து 6 க்குள்) மதுரைக் கோயிலிலிருந்து பாடி, அவ் வேத ஒலி நகரமக்கட் செவியில் இசைக்குமாறு ஒலிப் பெருக்கியின் அமைப்பால் செய்யவேண்டும். இவ்வாறு செய்யின் மக்கள் இன்பத்தோடு, தெய்வீக வுணர்ச்சியும் பெற்று அறவழியில் ஈர்க்கப் பெற்று வாழ்வார்கள்.

மதுரைமா நகரத்தார் இதைச் செய்வார்களாக. கோயில் அதிகாரிகளும் வேண்டிய உதவி புரிவார்களாக.

நாலாயிரத் திவ்ய பிரபந்தமும், திருப்புகழும் தமிழ் மறைகளாதலின் திருவரங்கம் முதலிய வைணவக் கோயில்களிலும் திருச் செந்தூர் முதலிய முருகன் திருக் கோயில்களிலும் விடியற் காலங்களில் இவ் வேதவொலிகள் கேட்கட்டும். மக்கள் தெய்வீக வாழ்விற் சிறந்து பல்லாண்டு வாழத் தமிழ் நாடு சிறக்கட்டும்!

* நன்மை கடைப்பிடி *

"ஒளி"

மேலைத் தலைப்பின் பொருள் 'சத்தியாக்கிரகம்' என்பது. இதன் ஆற்றல் எத்துணை என்பதை அண்மையில் காந்தியடிகள் இதனை அரசியல் துறையில் புகுத்திக் காட்டியிருக்கிறார்கள். நோன்புகளுள் சிறந்தது, கொல்லாமை; அதாவது, பிற உயிர்க்கு இன்னா செய்யாமை (அகிம்சை) என்பது, எல்லாரும் ஒப்பும் ஓர் உண்மை. ஆனால் உண்மையை எங்கும் பரப்புதல் வேண்டும் என்னும் பெருவேட்கையினால் பிறர் மனம் நோகக் கூடியதையும் செய்து விடுவது மக்களிற் பலருடைய இயற்கையாக இருக்கிறது. ஆகவே உண்மைகளைப் பரப்புகிற போதும் அதை இயல்பாகவும் இனிமையாகவும் பரப்புவதோடு, அது பரவாமைக்காகத் தன்னைத் தான் வருத்திக் கொள்ளலாமே ஒழியப் பிறரை வருத்தக் கூடாது என்னும் அடிப்படை நோக்கத்தில் அரும்பியது, சத்தியாக்கிரகம் என்னும் இம்மெய்மை கடைப்பிடி; இந்நோன்பை மேற்கொண்டவர் தம் உண்மைக் கருத்துகளை....... உரியவர்கள் ஏற்காதபோது மனத்தாலும் சொல்லாலுமன்றி உடலாலும் தம்மைத்தாமே வருத்திக்கொள்வர்.

அடுத்துள்ளவர்களின் ஆராய்ச்சியுணர்வைத் தட்டி எழுப்புவதற்கு இதனினும் சிறந்த கருவி ஒன்று உலகத்தில் இல்லை. திருவருளாற்றல் ஒன்றே இதனினும் சிறந்தது என்று சொல்லலாம். ஆனால் திருவருள் துணையுடையவர்களாலேயே இந்நோன்பை மேற்கொள்ள முடியுமே அல்லாமல் மற்றவர்களால் இதை அவ்வளவு எளிதாக மேற்கொள்ள முடியாது. இந்நோன்பால் ஏற்படும் வெற்றி தோல்வியைக் கொண்டே, நோன்பேற்றவரின் தகுதியையும் அவர் கொண்ட கருத்தின் சிறப்பையும் அளவிட்டு விடலாம்.

இந்நோன்பு, காலம், இடம், காரணம் முதலிய பலவற்றையும் ஒட்டி உண்ணாமை, உடுத்தல் முடித்தல் முதலிய நுகர்பொருள்களைக் கொள்ளாமை, பேசாமை, பாராமை முதலிய பல்வேறு வகைகளில் மேற்கொள்ளப்படும். இவையெல்லாம், அடுத்துள்ளவர்கள் குறிப்பிட்ட ஒன்றைப் பற்றிக் கொண்டுள்ள கருத்தைப் போக்கவும், அவர்கள்பால் உள்ள அன்பு அறிவு ஆற்றல்களைக் கிளரவும், தவறான போக்குகளைத் திருத்தவுமே ஆகும்.

இக்காலத்தில் இந்நோன்புக்கு ஒரு மறுமலர்ச்சி (விளம்பரம்) அளித்தவர் காந்தியடிகள். ஆனால் நம் நாட்டில் பண்டைக் காலமுதலே இந்நோன்பை மேற்கொள்ளும் பழக்கம் இருந்து வந்திருக்கிறது. அயல் நாட்டுச் சான்றோர்களிற் சிலரும் இந்நோன்பை மேற்கொண்டிருக்கின்றனர். மாணிக்க வாசகர், திருநாவுக்கரசர், பிரகலாதர் முதலிய நாயன்மார்கள் ஆழ்வார்கள் எல்லோருடைய வாழ்க்கையும், அரிச்சந்திரன் சிபி முதலிய அரசர்கள், சாக்கிரடிஸ் இயேசு முதலிய சான்றோர்கள் வாலாறுகளுமே இதற்குச் சான்றாகும். குறிப்பிடத்தக்க வரலாறுகள் இல்லை என்றாலும் பண்டைத் தமிழ் நாட்டில் இது பெருவழக்குற்றிருந்தது என்று நன்றாகத் தெரிகின்றது. தான் காதலித்த பெண்ணை ஒருவன் உலகியல் நிலைகளினால் ஏற்படும் தகுதிக் குறைவு முதலிய காரணங்களால் அடைய முடியாது என்று தெரிந்தால் அவன் அப் பெண்ணின் படம் வரையப் பட்ட கொடியைத் தாங்கிப் பனை ஓலைகளினால் செய்யப்பட்ட குதிரையில் ஏறி, அப் பெண் உறையும் ஊரின் வீதிகளில் ஊர்ந்து வருவான் என்றும், அதற்குப்பின் அவர்கள் கருத்துக்கு யாரும் தடை செய்யாதபடி அவ்வூர்ப் பெரி

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

நஞ்சன்கூடு பல்பொடி.

பாக்டெரியாரின்

யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை-1.

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

யோர்களே உடனிருந்து அவர்கள் திருமணத்தை முடித்து வைப்பர் என்னும் பழைய தமிழ் இலக்கண இலக்கியக் குறிப்புகள் கூறுகின்றன. 'மடலேறுதல்' என்னும் இச்செய்கை 'சத்தியாக்கிரகம்' என்னும் நோன்பேயன்றி வேறில்லை.

இந்நோன்பை இக்காலத்தில் பலர் தத்தம் தவறான கொள்கைகளைப் பரப்புதற்கும் பிறவற்றிற்கும் பயன்படுத்துகின்றனர். தம் தகுதிகளை நன்றாக எண்ணிப்பாராமலும், கொண்ட கருத்து சரியானதுதானா என்று நன்றாக ஆழ்ந்து பாராமலும், இந் நோன்பை மேற்கொள்வது கூடாது. தீர எண்ணித் துணிய வேண்டும். துணிவு சரியானதாக இருந்தால் இந் நோன்பினால் பயன் விளையாமற் போகவே போகாது. அழிவுக்குப் பயன்படுத்தப்படும் அணுக்குண்டு, ஒருகால் தன் விளைவில் தவறி விடலாம்; ஆனால் ஆக்கத்துக்குப் பயன்படும் இம்மெய்ம்மை கடைப்பிடி ஒரு போதும் தன் விளைவில் தவறாது.

இதனை மேற்கொள்வார்க்கு இருக்க வேண்டிய தகுதிகள் பல. விருப்பு வெறுப்பு அற்ற மனநிலையும், பகைவரையும் நேசிக்கும் பண்பாடும், அடக்கம், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, எதையும் ஆழ்ந்து ஆராயும் தன்மை, அன்பு, எளிமை, இனிமை முதலிய பல உயர் குணங்களும் இந் நோன்பை மேற்கொள்வார் பெற வேண்டிய முதல் தகுதிகள்.

நாட்டில் நிலவும் குழப்பம், போர் அச்சம், முறைகேடு கடமை மறப்பு முதலியவற்றை யெல்லாம் ஒழிக்க இதனினும் சிறந்த கருவி இல்லை என்பதில் ஐயமேயில்லை.

குடும்பங்களில் கணவனும் மனைவியும் தந்தையும் மகனும் உற்றாரும் உறவினரும் பெற வேண்டிய திருத்தங்களும் பிறவுங் கூட இந் நோன்பைத் தகுதியறிந்து மேற்கொள்வதனால் பெறும்படி செய்யலாம்.

நோன்பு என்னும் சொல்லுக்குரிய வன்மை, ஆற்றல் என்னும் பொருள்களின் முழு விளக்கத்தையும் இந் நோன்பினாலன்றி வேறு எதனாலும் அறிய முடியாது என்று உறுதியாகச் சொல்லலாம்.

வெற்றிக்குரிய அழிவில்லாத ஆக்க நெறி இது ஒன்றே. உலக சமாதானத்திற்காகப் போர் முழக்கம் செய்யும் வல்லரசுகளைத் திருத்திப் போரை யெல்லாம் போக்கி என்றும் மாறாத வெற்றியை அளிக்கக் கூடிய இதன் ஆற்றலை எண்ணி, அறிஞர்களும் சான்றோர்களும் உலகத்தில் அமைதியை நிலை நாட்ட முயல்வார்களாக!

தகுதியில்லாத் - - - - - திட்டம்

(சி. து. க.)

கைத்தொழிலாளருக்கு மட்டுமல்லாமல் மற்றெவ்வகைத் தொழிலாளிகட்கும் உழைப்புக்கேற்ற ஊதியம் தருவது சிறந்ததொரு செயலென்று மக்கள் கருதுவதில்லை. பொதுவாகப் பயன் தரக்கூடிய பணிகள், கைத்திறமையால் செய்வனவோ, அல்லது மூளையின் பேருழைப்பினால் உருவாக்கப்படுவனவோ எவையாக இருப்பினும் அவைகட்கு மிகச் சிறிய அளவான ஊதியம் தான் கிடைக்கிறது. அல்லது ஊதியம் ஒன்றுமே இல்லாமற் கழிந்து போதலும் உண்டு ....தாம் வீண்பொழுது கழித்தற்குதவும் களியாட்டங்களுக்கும் ஏமாற்றப்படும் செயல்கட்கும் பெருவாரியாகப் பொருள் வழங்குவதென்றும் தமக்காக உழைப்போரைக் குறித்துச் சிறிதேனும் கவலை கொள்ளாதொழிவதென்றும் மக்கள் திட்டங்கள் வகுத்து நடைமுறையிற் பின்பற்றுகின்றனர். உதவாக்கரைப் பேச்சுக்கள் பேசிக் காலங் கழிப்பவனுக்கு ஆண்டொன்றுக்கு ஐயாயிரம் வெண்பொற் காசுகள்! ஆனால் நாட்டைக் காக்கப் போரிடுவோன், நிலம் அகழ்ந்து பொன் எடுப்போன், உழவாளி, சிந்தனைச் சிற்பி இத்திறத்தவருக்கு நாளொன்றுக்கு முக்கால் ரூபா! இந்த அளவினது நாட்டுத் திட்டம்! எக்காலத்தும், கலையிலோ, மொழியிலோ, விஞ்ஞானத்திலோ நல்லறிவு சான்ற ஒருவருக்குத் தம் தகுதிக்கேற்ற ஊதியம் கிடைத்த தென்று கூறுவதற்கில்லை. ஹோமர் தாம் எழுதிய இலியட் டுக்காகவும் டாண்டே தாம் எழுதிய துறக்கத்துக்காகவும் மிகக் குறைந்த புல்லிய உணவும், செல்வர் வீட்டுப் படிகளில் ஏறி இறங்கியதால் உண்டான கால் வலியுமல்லவா அவர்கள் பெற்ற ஊதியங்கள்! தொலைநோக்கி கண்டு பிடித்து முதலில் வானத்தியல்பை ஆய்ந்துரைத்த புலவன் சிறையில் மாண்டொழிந்ததும், நுண்பொருள் நோக்கி கண்டு நிலத்தியல்பை ஆய்ந்துரைத்த மேலோன், வீட்டினின்று துரத்தப்பட்டுப் பட்டினியால் அவதியுற்றொழிந்ததும் அறியார் யார்?

John Ruskin. (The crown of wild olive.)

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்.).